PR/2019/15/T

# ஜப்பான் தூதரகம்


**இல** .20, **ஸ்ரீமத் ஆர்**.**ஜி** .**சேனானாயக்க மாவத்த**, **கொழும்பு** 7, **இலங்கை**

**தொலைபேசி** :94-11-269-3831~3 **தொலைநகல்** : 94-11-269-8629

**மின்னஞ்சல்** :cultujpn@sltnet.lk


**மார்ச் 13, 2019**

## <u>ஊடக அறிக்கை</u>

***அனுராதபுரம் மாவட்டத்தில் நிலையான விவசாய உற்பத்தி செயற்த்திட்டத்திற்கான நீர் முகாமைத்துவத்திற்கு ஜப்பான் அரசாங்கம் உதவி***

*அனுராதபுரம் மாவட்டத்தின் வரட்சியான பகுதிகளின் நிலையான விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசன பொருட்கள் பகிர்ந்தளிக்கும் திட்டத்திற்காக, தன்னுடைய அடித்தட்டு மக்களுக்களின் பாதுகாப்புக்கான பேருதவி திட்டத்தினூடாக (GGP) ஜப்பானிய அரசாங்கம் 89,285 அமெரிக்க டொலர்களை மேலதிகமாக வழங்கியுள்ளது.*

*ஜப்பான் நாட்டின் தூதுவர் அகிரா சுகியமா மற்றும் சேவா லங்கா நிறுவன பொறுப்பதிகாரி கலாநிதி. ஹர்ஷ குமார நவரட்ண ஆகியோருக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கடந்த 13.03.2019 அன்று கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரின் வாசஸ்தலத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.*

*இத்திட்டமானது ஆழ்துளை கிணறு, மரக்கறி செய்கை மையம் போன்ற நீர்ப்பாசன வளங்களை வழங்குவதன் மூலம் அனுராதபுர மாவட்டத்தின் நொச்சியாகம பிரதேசத்தில் விவசாய உற்பத்திகளை பெருக்குதல் மற்றும் விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டதாகும். இயற்கை விவசாயம் மேற்கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்தலுக்கான பயிற்சியும் இத்துடன் வழங்கப்பட்டுள்ளது.*

அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதியாகும் நொச்சியாகம அனுராதபுர மாட்டத்திலுள்ள ஓர் உலர் வலயமாகும். இங்குள்ள விவசாயிகள் தங்களது நீர்ப்பாசன திட்டங்களை மேம்படுத்த முடியாத நிலை காணப்படுவதோடு, வருடத்தின் மழை பெய்யும் ஓரிரு மாதங்கள் மட்டுமே தமது நிலங்களை பயிற்செய்கைக்கு உட்படுத்தும் நிலை காணப்படுகிறது. மழை காலம் தவிர்ந்த மாதங்களில் தங்களது விளைநிலங்களில் இவர்களால் வேலை செய்ய முடியாமையினால், நீர் வளம் உள்ள வேறு நிலங்களிலோ அல்லது நாள் கூலியாகவோ வேலை செய்வதுடன் அது அவர்களுக்கு போதுமான வருமானத்தை பெற்றுத்தருவதில்லை. குறித்த இந்த பயிற்சி மற்றும் பொருட்கள் வழங்கும் திட்டம் இவர்கள், இயற்கையான காய்கறி பயிர்செய்கையினை மேற்கொள்ளவும் , அதனை சுகாதாரமான முறையில் பராமரிக்கவும், அவற்றை அதிக மதிப்புடன் விற்பனை செய்யவும் அவர்களுக்கு உதவும். அத்துடன் சேவாலங்கா நிறுவனமானது இவர்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய இவர்களுக்கு உதவும்.

விவசாயிகளுக்கான மானியம் வழங்கும் குறித்த திட்டம் தொடர்பாக கலாநிதி. நவரட்ண குறிப்பிடுகையில், "இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நொச்சியாகம வருடத்தின் 3 அல்லது 4 மாதங்கள் மாத்திரமே மழை வீழ்ச்சியினை பெறும் ஓர் உலர் வலயமாகும். ஆகவே இப்பகுதி விவசாயிகளின் நிலையான விவசாய உற்பத்திகளை மேம்படுத்துதல் அதி முக்கியமான ஒன்றாகும். அடித்தட்டு விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த கடந்த காலங்களிலும் இத்திட்டத்தின் மூலமும், மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளுக்காக நாம் ஜப்பானிய மக்களுக்கும் அரசுக்கும், விசேடவிதமாக மதிப்புக்குரிய அகிரா சுகியாமா ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்தார்.

**(முற்றும்)**

.

**********************************************************

**மேலதிக விபரங்களுக்கு பொருளாதார மற்றும் அபிவிருத்தி கூட்டுறவுப் பிரிவினருடன் தொடர்புகொள்க.**

Tel: 011-269-3831~3 (ext.225)